**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

உண்டி முதற்றே உணவின் பிண்டம்!

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;

நீரும் நிலமும் புணரியோர்,

ஈண்டு உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
3. 'யாக்கை' என்பதன் பொருள் யாது?
4. 'உணவு' எனப்படுவது எது?
5. 'உண்டி' என்பதன் பொருள் யாது?
6. அடி மோனையை எடுத்து எழுதுக.
7. சீர் மோனையை எடுத்து எழுதுக.
8. 'உணவெனப்படுவது' - என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.
9. புணரியோர் பொருள் கூறுக.